

### என்ஜினீயரிங் கல்லூரிகளில்

# பி.பி.ஏ., பி.சி.ஏ. பாடப்பிரிவுகளை கொண்டு வருவதை கைவிட வேண்டும்

## தனியார் சுயநிதி கலை, அறிவியல் மேலாண்மை கல்லூரி நலச்சங்கம் கோரிக்கை

கோவை, டிச.15–

தமிழ்நாடு தனியார் சுயநிதி கலை, அறிவியல் மேலாண்மை கல்லூரி நலச்சங்க செயலாளர் சேதுபதி கோவை ராம்நகரில் உள்ள ஒரு தனியார் ஓட்டலில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:– தொழில்நுட்பம் சாராத கலை அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வரும் பி.பி.ஏ., பி.சி.ஏ. ஆகிய பாடப்பிரிவுகளை வருகிற 2024–25–ம் கல்வியாண்டில் என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் கொண்டு வர உள்ளதாக அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) அறிவித்து உள்ளது. மேலும் இந்த பி.பி.ஏ., பி.சி.ஏ. படிப்புகளை நடத்தும் கலை, அறிவியல் கல்லூரிகள் ஏ.ஐ.சி.டி.இ. அனுமதி பெறவேண்டும் என்ற புதிய அறிவிப்பும் வெளியிடப்பட்டு உள்ளது.

இத்தகைய அறிவிப்பால், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு பல்வேறு நடைமுறை சிக்கல்கள், நெருக்கடிகள் எழுந்து உள்ளன. இதுதவிர பி.பி.ஏ., பி.சி.ஏ. படிப்புகளுக்கான கட்டணம் கணிசமாக உயர்வதுடன், பிற படிப்புகளில் மாணவர்களின் சேர்க்கை முற்றிலும் சரியும் வாய்ப்பும் உள்ளது. மேலும் தொழில்நுட்ப கல்லூரிகளில் இந்த பாடப்பிரிவுகளில் மாணவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் சேர்க்கலாம் என்ற அறிவிப்பு கல்வியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. என்ஜினீயரிங் கல்லூரிகளில் இந்த படிப்புக்கான ஆசிரியர்கள் உள்பட பல்வேறு வசதிகள் இருக்காது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும். எனவே ஏ.ஐ.சி.டி.இ.வின் இந்த அறிவிப்பை திரும்ப பெற வேண்டும். தொழில்நுட்பம் சாராத படிப்புகள் என்ஜினீயரிங் கல்லூரிகளில் தொடங்க அனுமதிக்க கூடாது. இதுதொடர்பாக தனியாக குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின்போது துணைத் தலைவர் சந்திரசேகர், இணை செயலாளர் சுலைமான், பொருளாளர் நித்தியானந்தம், இ.சி. உறுப்பினர்கள் வெங்கடாசலம், நளின், முன்னாள் தலைவர் புரவலர் ஏ.எம்.எம்.கலீல் உள்பட பலர் உடன் இருந்தனர்.